தெளிவாகும். ஆகவே, என்னுடைய பதிலுரைக்கு ஏறக்குறைய 2½ மணி நேரம் தேவைப்படும் என்பதால், மாண்புமிகு பேரவைத் தலைவர் நாளை என்னுடைய பதிலுரையை இந்த அவையில் தருவதற்கு எனக்கு வாய்ப்புக் கொடுத்தால் நான் நன்றியுடையவளாக இருப்பேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளை பதிலுரையை வைத்துக்கொள்ளலாம். மாண்புமிகு பேரவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவில் நாம் எடுத்த முடிவிற்கிணங்க எல்லா அரசியல் கட்சியினுடைய தலைவர்கள் எல்லாம் பேசி முடித்ததற்குப் பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றே பதிலுரையைத் தந்து முடிக்க முடியும் என்று எதிர்பார்த்தாலும். எதிர்பாராதவகையில் இங்கே விவாதங்கள் விளக்கங்கள் நீண்டுவிட்டதன் காரணமாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டதற்கிணங்க இந்த அவையை ஒத்திவைத்து, நாளை 10 மணிக்குத் தொடங்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் உண்டு. பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(22-3-1994)* காலை *10.00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1-48* மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

3. பேரவைமுன் வைக்கபெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

38. 1992-93-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் நாற்பத்தி நான்காவது ஆண்டறிக்கை. *(1956*-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் *(*மத்தியச் சட்டம் *1/1956) 619*–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.*)* (தமிழ், ஆங்கிலம்).

39. 1992–93-ஆம் ஆண்டிற்கான அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகத்தின் ஆறாவது ஆண்டறிக்கை *(1956*-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் *(*மத்தியச் சட்டம் *1/1956) 619*–ஏ பிரிவன் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.*)* *(*தமிழ், ஆங்கிலம்*).*

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 21]

40. 1992-93-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவன் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்).

41. 1992-93-ஆம் ஆண்டிற்கான அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் இருபத்தியொன்றாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவன் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்).

42. 1993-ஆம் ஆண்டிற்கான செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவன் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்).

43. 1992-93-ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவன் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்).

44. 1992-93-ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவன் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்).

45. 1992-93-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் இருபத்தியெட்டாவ்து ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவன் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் மற்றும் ஏனைய தாள்கள் : எதுவுமில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS